SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை மார்கழி, 2014

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

### இதழின் உள்ளே

1. மட்டக்களப்பு
2. யாழ்
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். (Create a Conducive Society for Good Environment for the Future).**

**காலநிலை மாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental Protection)**

காலநிலை மாற்றம் தொடர்பான செயற்பாடுகளில் காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது 6வது அமர்வானது துறைசார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் 26 பேரை உள்ளடக்கியதாக நடைபெற்றது. இதன் போது கரையோரங்களில் அமைக்கப்பட்டுவரும் சுற்றுலா விடுதிகளால் சேதமாக்கப்பட்டுவரும் முருகைக் கற்களை பாதுகாப்பதற்கு ஏதாவது முன்னெடுப்புக்களை மேற்கொள்வது மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பாக உருவாக்கப்பட்ட முகநூல் மற்றும் மின்னஞ்சல் கணக்கு பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன் காலநிலை மாற்றத்திற்கேற்ற விதத்தில் பயிர்ச் செய்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பாக விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விவசாயப் போதனாசிரியர் அவர்களின் விளக்கங்களும் இடம் பெற்றன.

காலநிலை மாற்ற செயற்பாட்டுக் குழுவினது அமர்வுகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பல்கலைக் கழக மட்டத்தில் துறைசார்ந்த பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுடனான கலந்துரையாடலில் பெறப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக ஓர் தெளிவூட்டல் கருத்தரங்கு கிழக்குப் பல்கலைக் கழக மண்பத்தில் நடைபெற்றது. இதில் அரச, அரச சார்பற்ற மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் அடங்கலாக 92 பேர் பங்குபற்றியிருந்தனர்.







## வெள்ள அனர்த்த உதவி வழங்குதல்.

வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பட்டிப்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த தமது வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்த 54 குடும்பங்களுக்கான உணவுப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

**"We all will Create a Better World"**

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடு விபரம்

## மிதி வெடி அபாயக்கல்விச் செயற்றிட்டம்

மாவிட்டபுரம் பகுதியில் மக்களினால் இனங்காட்டப்பட்டு எமது MRE களப்பணியாளர்களினால் வெடிக்காத வெடி பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டது





## நூலகச் செயற்பாடு

நடமாடும் நூலகம் செய்யப்படும் பாடசாலைகளான யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்கலவன் பாடசாலை,(யா/ஞானபண்டித வித்தியாசாலை போன்றவற்றிற்கு அன்பளிப்பாக **TINY LIFCODictionary** மற்றும் திருக்குறள் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.



**“We all will Create a Better World”**

SOND

# நிதியின்றிய செயற்திட்டம்

அரச சார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்ட இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 11 ஆண், 19 பெண் உள்ளடங்கலாக 30 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

## கலந்துரையாடல்கள்.

காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் **SOND** பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் 30 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.



### *சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. எமது அலுவலகத்தில் காணப்படும் இரு பக்கங்கள் பாவித்த தாள்களைக் கொண்டு காந்தி சிறுவர்கழக உறுப்பினர்களினால் 425 சிறுபைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. சிறுவர்களின் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்களிற்கு (வாச்சிக்குடா,கோளாவில்,அக்கரைப்பற்று7பிரிவு, ஆலையடிவேம்பு) நடமாடும் நூலக சேவை நடாத்தப்பட்டது இதில் 116 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### *SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.*

1. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரம் போட், **foot Ball** , **Cricket Bat** வழங்கப்பட்டுள்ளது.

## வளநிலைய பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 13 தலைப்பில் 143 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.